Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 129/2014**

வழக்கு சாட்சி எண். PW29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாரதா | கிராமம் | : | தரிசுகாடு |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தாலுக்கா | : | கள்ளகுறிச்சி |
| வயது | : | 33 | மாவட்டம் | : | கள்ளகுறிச்சி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23d Day of **July 2026.**

**முதல் விசாரணை**

நான் கள்ளகுறிச்சியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு மாலை 04.00 மணியளவில் நாங்கள் சித்தேரி திருமணத்திற்கு சென்று விட்டு தீர்த்தமலை கடந்து வந்து கொண்டு இருந்த போது லாரி வேகமாக வந்ததால் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. எனக்கு முதுகிலும் , பின்னந்தலையிலும் காயம் ஏற்பட்டது. விபத்தில் தங்கவேலுடன் 2 நபர்கள் இறந்துவிட்டார். பின்பு நான் அரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மேலும் வெள்ளிமலையில் உள்ள மாவடிப்பட்டி மருத்துவமையில் பின் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைப் பெற்றேன். பின்பு போலீசார் என்னை விசாரணை

செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியது. லாரி மிதமான வேகத்தில் சென்று இருந்தது என்றால் சரிதான். விபத்து எவ்வாறு நடந்து என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்திற்கு யார் காரணம் என்ற விவரமும் எனக்கு தெரியாது. இழப்பீடு பெறுவதற்காக வேண்டி கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**